# விவிலிய வினாடி வினா

### சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசரியா, வில்சன் மேரி,ரூபெல்லா மேரி, ஜோஸ்பிட்டா மேரி, எதெல் பெர்கா- திருச்சி, ஜெரின் மேரி, லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், ஜான்சி மேரி, லில்லி இஸபெல்லா மேரி, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், அர்மெல்லா - கன்னியாகுமரி, சிரோன், வித்யா மேரி, மரிய சூசை ரூபி- தூத்துக்குடி, சகாயம் - கடலூர், சலேத் மேரி -திருப்பூர் ஜார்லத் புஷ்பா, அனன்சியா மேரி, டோம்னா மேரி, பவுலின் மேரி, லூகாஸ் மேரி - கும்பகோணம், எலிஷா, ஏதெல் பெர்க்கா, செராபின் டெய்சி, லூர்து மேரி, டெய்சி

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா,ஜேடன், ஆனி பீட்டர் ராஜ், ஜான் ஜோசப், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா,மேரி மார்கிரேட், நான்சி பியூலா, செலின் மேரி, பாத்திமா, கிளாரா லூர்துமேரி, புஷ்பக்கண்னு, மிக்கேல் சாமி - கோயமுத்தூர், சிப்ரியன்-தேனி, மேரி - இளையரசனேந்தல், ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம், வியாகுல மேரி ஜெபமாலை - சென்னை, மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி, அற்புத சீலி, லீலாவதி, *இருதய விஜில்லா* - திண்டுக்கல், மரிய பிரகாசம் - தர்மபுரி, ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், மடலை முத்து, இம்மாகுலேட் சோஃபியா

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரி. சிரோன் - திசையன்விளை**
**திருமதி. மரிய பிரகாசம் - தர்மபுரி**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. M. ANTONY SHAJI OSM.






# கார்மல் அன்னை


## பதிப்பாசிரியர் பக்கம்



அன்பு வாசகர்களே! அன்னை மரியின் பக்தர்களே!
ஆகட்டும் இதழின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. ஜூலை 16 திருஅவையில் கார்மேல் அன்னையின் விழாவை கொண்டாடுகிறோம்.
கார்மேல் அன்னையின் வரலாறு
விவிலியத்தில் ஓரேபு மலை, சீனாய் மலை,தாபோர் மலை, கல்வாரி மலை என மலைகளுக்கென்று தனி தன்மையும் சிறப்பும் இருப்பது போன்று, கார்மேல் மலைக்கு என தனி சிறப்பு உண்டு. கார்மேல் என்றால் எபிரெய மொழியில் அழகான பூந்தோட்டம் என பொருள்படும். தனது பெயருக்கு ஏற்ப அழகிய தோட்டமாகவே கார்மேல் மலை திகழ்ந்துள்ளது என்பது இறைவாக்கினர், ஏசாயா நூலிலும் இனிமை மிகு பாடலும் சான்று பகர்கிறது. கார்மேல் மலைக்கு ஆழமான விவிலிய பின்னணி உண்டு. இறைவாக்கினர், எலியாவின் காலகட்டத்தில் கார்மல்மலை இறை வழிபாட்டின் தளமாக இயங்கி வந்தது. இறைவாக்கினர், எலியா பாகால் தெய்வத்தை வழிபட்டவர்களை தோற்கடித்தது இந்த கார்மல் மலையில்தான். இறைவாக்கினர், எலியா வானத்திலிருந்து நெருப்பை வரவழைத்து யாவே தான் உயிர் உள்ள தெய்வம் என்று மேய்ப்பித்து காட்டியதும் இந்த கார்மல் மழையில் தான். போலி இறைவாக்கினர்கள் 450 பேரையும் வாளுக்கு இரையாக்கி சமூகத்தில் நிலவி வந்த களைகளை அப்புறப்படுத்தியதும் இந்த கார்மல் மலையில்தான்.கடும் பஞ்சம் நிலவிய காலகட்டத்தில் மழை வரும் என்று எலியா முன்மொழிந்தது இந்த கார்மேல்



## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| அமைதியின் அரசியான மரியா | 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| மரியாளின் பாடல் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

மலையில் கண்ட காட்சியின் வழியாகத்தான். இவ்வாறு கார்மேல் மலை இறைபிரசன்னத்தின் அடையாளமாகவும் இறைவழிபாட்டின் தளமாகவும் இயங்கி வந்தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கார்மல் மலைக்கும் கார்மேல் அன்னைக்கும் என்ன தொடர்பு ? மரியன்னை எதற்காக கார்மல் அன்னை என்று அழைக்கப்படுகிறார்? அதற்கு மூன்று காரணங்கள் சொல்லப்படுகிறது.
1. கார்மேல் மலையில் இறைவாக்கினர் எலியா கண்ட காட்சி, மரியாவின் அமலோற்பவத்திற்கு முன்னடையாளமாகவும், கன்னியின் வயிற்றில் பிறக்க இருந்த மீட்பரின் வருகையை முன்கூட்டி அறிவிப்பதாகவும் அமைந்தது.
2. இறைவாக்கினர் எலியாவின் காலம் முதல் திருமுழுக்கு யோவான் காலம் வரையில் கன்னியின் வயிற்றில் பிறக்க இருந்த மீட்பரின் வருகையை காத்திருந்த இறைவாக்கினர்கள் கார்மல் மலையில் தவம் செய்து காத்திருந்தார்கள்.
3. கார்மல் மலையில் கிபி 1251ல் புனித சைமன் ஸ்டோக் என்ற கார்மல் சபை தலைமை துறவிக்கு மரியன்னை காட்சியில் தோன்றி கார்மல் அன்னையின் விழாவை கொண்டாடும் படி கேட்டுக்கொண்டார். கார்மேல் சபையின் முதல் உறுப்பினர்கள் 12 முதல் 13ம் நூற்றாண்டு வரை திருநாட்டில் உள்ள கார்மேல் மலையில் வனவாசிகளாக வாழ்ந்தனர்.

கார்மேல் மலையில் இறைவாக்கினர் எலியா கண்ட காட்சி: கடலிலிருந்து கையளவு மேகம் எழும்புவதை கண்டார். கடலிலிருந்து எழுந்த கையளவு மேகம் உவர்ப்பு நீரில் இருந்து உருவாகிறது.ஆனால் மேகத்தில் சேர்ந்திருந்த நீரில் உவர்ப்பு இருக்க வில்லை. அதேபோன்றுதான் மரியாள் மண்ணுலகத்தில் பிறந்தாலும் மனு குலத்தில் இருந்த ஜென்ம பாவம் அவரை தீண்ட முடியவில்லை.

**உத்தரியத்தின் சிறப்புகள்:**

1. மரியன்னையின் தாயன்பு: உத்தரியம் என்பது கழுத்தில் அணியப்படும் சிறுதுணி. பாலன் இயேசுவை துணிகளில் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தியது அன்னை மரியாளின் தாயன்பை வெளிப்படுத்துகிறது. அதேபோன்றுதான் மரியன்னையின் இந்த பரிசு மனு குலத்தின் மீதான தாயன்பை பறை சாற்றுகிறது.நிர்வாண கோலத்தில் இருப்பவரை துணி மறைத்து மானத்தை காப்பாற்றுவது போன்று ஆண்டவரின் அருள் இல்லாமல் நிர்வாணமாய் இருப்பவருக்கு அன்னையின் ஆடை இறையருளை தந்து மானம் காக்கிறது.
2. அர்ப்பணம்: உத்தரியத்தை அணிந்திருப்பவர்கள் மரியன்னைக்கு தங்களை அர்ப்பணித்துள்ளார்கள் என்பதன் அடையாளமாக தான் அதை அணிந்திருக்கிறார்கள்.
3. பாதுகாக்கும் கருவி: உத்தரியத்தை அணிந்திருப்பவரின் ஆன்மாவை மரியன்னை அழிய விடாமல் பாதுகாக்கின்றார். ஆகவே ஆன்மாவை காக்கும் கருவியாக இது திகழ்கிறது.

அழகிய பூந்தோட்டம் என பெயர் பெற்ற கார்மல் மலையில் தோன்றிய மரியன்னை, பிள்ளைகள் ஒவ்வொருவரின் வாழ்வையும் அழகழகான பூக்களால் பூக்களின் மணத்தால் நிரப்புகிறாள். பூக்களை தேடி செல்லும் தேனீக்களை போல நாமும் கார்மேல் அன்னையை தேடுவோம். அன்னையின் தோட்டத்தில் சுவையான கனிகளாக கனிகளை ருசித்து பறந்து விரிந்து வாழ்வு தரும் மர நிழலில் நித்தமும் இளைப்பாறுவோம்.





3. எனக்கு திருமணம் நடந்து 5 வருடங்கள் முடிந்தன. அதில் இரண்டு கருச்சிதைவு நடந்தது . என் மனைவியின் நண்பர் ஒருவர் ஜீவமாதா கோவிலை பற்றி கூறினார் . எல்லா மாதமும் தவறாமல் வந்து திருப்பலியும் ஆராதனையிலும் கலந்து கொண்டு ஜீவ மாதாவிடம் வேண்டிக் கொள்வோம். ஆறு மாதத்தில் எனது மனைவி கருவுற்றான். ஜீவ மாதாவிற்கு நன்றி.

4 பெயர்: எஸ்தர்- எனக்கு 2020இல் திருமணம் நடைபெற்றது. அந்த வருடம் இறுதியில் எனக்கு ஒரு கருச்சிதைவு ஆகிவிட்டது. அதன் பிறகும் நான் கருவுற்று, அதுவும் கருச்சிதைவு ஆகிவிட்டது. குழந்தைக்கு வளர்ச்சி இல்லை, இதயத்துடிப்பு இல்லை என்று கூறினார்கள். 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நான் இங்கு வர தொடங்கினேன். நான் வேண்டிய 18 நாட்களிலேயே நான் கருவுற்றேன். ஆனால் மருத்துவர்கள் குழந்தை உருவாகவில்லை என்று கூறி விட்டார்கள். அன்றே ஜீவ மாதாவிடம் வந்து அழுது வேண்டிக்கொண்டேன். மறுநாள் மற்றொரு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்குள்ள மருத்துவர் குழந்தை இதயத்துடிப்பு இருக்கிறது என்று கூறினார். இதயத்துடிப்பு இன்னும் நன்றாக கேட்பதற்கு எனக்கு ஊசி போட வேண்டும் என்று கூறினார்கள். இன்று வரை நான் போட்டுக் கொண்டிருக்கிறேன். என் குழந்தை இப்போது ஆரோக்கியமாக இருக்கிறது. மரியே வாழ்க! இயேசுவுக்கே புகழ்!

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.
வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.
உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.
1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

ஜுன் மாதம் 7 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

1.இடம்: திருச்சி. திருமணம் நடந்து 11 வருடங்கள் முடிந்தது. பத்து வருடமாக குழந்தை இல்லாமல் இருந்தோம். நான் ஜீவமாதா ஆலயத்திற்கு 2022 ஆண்டு முதல் வந்து கொண்டிருக்கிறேன். 2017 ல் என்னை இந்த ஆலயத்திற்கு வந்தால் குழந்தை வரம் கண்டிப்பாக கிடைக்கும் என்று கூறினார்கள். நானும் இங்கு வந்து மாதாவிடம் வேண்டிக்கொண்டு இங்கு இருக்கும் புத்தகத்தில் எழுதி வைத்துவிட்டு சென்றேன். அப்பொழுது நான் நம்பவில்லை. ஆனால் என்னுடைய நண்பர் என்னை வற்புறுத்தியதால் நான் வந்தேன். 2021 ஆம் ஆண்டிலிருந்து மாதாவின் மேல் நம்பிக்கை வைத்து நான் வந்து வேண்டினேன் . நானும் மற்றவர்களைப் போல சாட்சி சொல்ல வேண்டும் என்று ஏங்கினேன். 2024 ஆகஸ்ட் 24ஆம் ஆண்டில் இந்த அழகான பெண் குழந்தையை எனக்கு அருளினார். குழந்தை பெயர் : ஜீவானி சாண்டினா

2. இடம்: திருச்சி ( ஜெகன் மாதா பங்கு). எனது மகனுக்கு 2022 ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. அதன் பிறகு கருச்சிதைவு ஆகிவிட்டது. ஒவ்வொரு மாதமும் நாங்கள் எங்கள் குடும்பம் முழுவதுமாக இங்கு வருவதும், நேரலையில் பார்ப்பதுமாக ஜீவ மாதாவிடம் வேண்டிக் கொண்டோம். 2024 மே மாதம் நாங்கள் ஜீவமாதா ஆலயத்திற்கு வந்து சிறப்பாக வேண்டிக் கொண்டோம். பங்குத்தந்தை ஜீவமாதாவின் வளையலை ஜெபித்து கொடுத்தார். எனது மருமகள் கையில் அணிந்து கொண்டாள். அதே மாதம் அவளுக்கு கரு நின்றது. 2025 பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி ஆண்டவர் அர்ப்பணிக்கப்பட்ட நாள் அன்று ஒரு ஆண் குழந்தையை ஜீவ மாதா கொடுத்தார். மாதாவிற்கு நன்றி.





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



சிறிய கிராமத்தில் வியாபாரி ஒருவர் மிகப்பெரிய செல்வராக இருந்தார். என்னிடம் எல்லா செல்வங்களும் இருக்கின்றன என்று ஆணவம் கொண்டார். இவர் அடிக்கடி கோவிலுக்கு செல்வார். கடவுளை வழிபட அல்ல, மாறாக நான் பெரியவன் என்பதை பிறர் முன் காட்டிக் கொள்ள. கோவிலுக்கு வெளியே அமர்ந்து இருக்கும் யாசகர்களை பார்த்து நக்கலாக சிரிப்பார். ஒரு நாள் அந்த கிராமத்திற்கு ஒரு முனிவர் வந்தார். செல்வந்தர் முனிவரிடம் சென்று ஐயா நான் பெரிய செல்வந்தன். ஆனால் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை எனக்கு உதவி செய்யும் என்றான். முனிவர் அவனை தான் தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார். முனிவர் அவரிடம் இங்கு ஒரு குகை உள்ளது. அதற்குள் உன்னை அனுப்புகிறேன். குகை முழுவதும் ரத்தின கற்களால் நிறைந்திருக்கும். நீ முதலில் பார்க்கும் ரத்தினக் கல்லை எடுத்துக்கொண்டு வெளியே வரவேண்டும் என்றார். செல்வந்தன் சரி என்று சம்மதித்தான். முனிவர் அவனை குகைக்குள் அனுப்பினார். உள்ளே சென்றதும் செல்வந்தன் வியந்து போனார். பெரிதும் சிறிதுமான குகையில் குவியலாக இரத்தின கற்கள் இருந்தன. எதை எடுப்பது என்பது தெரியாமல் குழம்பி போனார் வெகு நேரமாக தேடி நிறைய பெரிய ரத்தின கற்களை எடுத்துக்கொண்டு வெளியே வர முயன்றார். ஆனால் குகையின் கதவு மூடி இருந்தது. ஆகவே உள்ளே இருந்து கதவை திறந்து உதவி செய்யுங்கள் என்று கத்தினான். அதற்கு முனிவர் மிகப்பெரிய செல்வம் நேரமும், மனநிறைவும் தான். நீங்கள் இரண்டையும் தவற விட்டு விட்டீர்கள் குகையின் கதவு மூடியது மூடியது தான் என்றார்.

கபிரியில் வான தூதர் மரியாளுக்கு தோன்றி, இயேசுவின் பிறப்பை பற்றி முன்னறிவித்த போது, மரியாள் இது எப்படி நிகழும்( லூக்கா 1:34) என்று மட்டும் தான் கேட்டார். நான் சில ஆண்டுகள் கழித்து சம்மதிக்கிறேன். திருமணமான பிறகு கணவரிடம் கேட்டு சொல்கிறேன் என்று தள்ளிப் போடவில்லை. மன நிறைவோடு சம்மதம் தெரிவித்தார்.

ஒவ்வொரு செயலிலும் சுய லாபத்தையும், சுய பெருமையும் தேடி செல்வதால் மன நிறைவு மங்கி போகிறது.

சமூகத்திற்கு எது நன்மை பயக்கும் என்பதை விட தனக்கு எது லாபம் என்ற எண்ணம் மேலோங்கி உள்ளது. நிறைவான செல்வம் இறைவனுக்கு தன்னை அர்ப்பணம் ஆக்கிக் கொள்வதுதான் என்று மரியாள் நமக்கு வாழ்ந்து காட்டினார். மரியாவின் பிள்ளைகளாய் நிலையான செல்வத்தை நோக்கி பயணிப்போம்.

# அமைதியின் அரசியான மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

இந்நாட்களில் நாம் பல வகையான போர்கள், இடர்பாடுகள், வன்கொடுமைகள் பற்றி அறிந்து மிகவும் வருந்துகிறோம். இவ்வாறு உலக நாடுகளும் சமுதாயமும் போய்க் கொண்டிருந்தால் பாமர மக்கள் படும் துயரமும் வேதனையும் என்று முடியும் என்ற அங்கலாய்ப்பும் தொடர்கிறது. நமது தாய் மரியாவிடம் திரும்புவோம். சமாதானத்தின் இராக்கினி என்று அழைக்கப்படும் அவர் இத்துயரங்களைப் பார்த்து வருந்துகின்றார். உலகத் தலைவர்களுக்காக மகனிடம் வேண்டுகின்றார். அமைதியின் இளவரசராகிய அவரும் தம் தந்தையிடம் நமக்காக இப்பூமியில் நீதியும் அமைதியும் தழைத்தோங்கவும் மன்றாடுகிறார். நாமும் மிகவும் உருக்கமாக மக்களை அச்சுறுத்தும் இந்தக் கொடிய போர் ஆயுதங்கள் அமைதியின் கருவிகளாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நமது இதயத்தின் ஆழத்திலிருந்து நமது மன்றாட்டுகளை விண்ணகம் நோக்கி எழுப்புவோம்.

**அமைதியின் அரசி**

கத்தோலிக்கத் திருஅவையில் தூய கன்னிமரியாவை அமைதியின் அரசியாக அழைக்கும் மரபு தொடர்கிறது. மத்தியத் தரைக்கடல் வழியைப் பயன்படுத்தா வண்ணம் ஆட்டோமான் துருக்கியர்கள், ஐரோப்பிய கத்தோலிக்க நாடுகளுக்கு இழைத்த இடையூறுகளால் ஒரு பெரிய போர் உருவானது. அப்போது திருத்தந்தையாக இருந்த 5 ஆம் பத்திநாதர் அன்னை மரியாவிடம் கத்தோலிக்க மக்களை செபிக்கக் கேட்டுக் கொண்டார். 1571 ஆம் ஆண்டு அக்டோபர் 7 ஆம் நாள் நடைபெற்ற லெப்பென்றோ போரில் ஐரோப்பிய நாடுகள் வெற்றி பெற்றன. இதற்குக் காரணம் செபமாலை செபித்தது என்றாலும் கூட, திருஅவை மரியாவை அமைதியின் அரசியாகப் பார்த்தது நமக்குத் தூண்டுதலாக இருக்கிறது. இத்தகைய நிகழ்வுகளிலிருந்து நாம் அறிவது என்ன? நாம் தொடர்ந்து தவத்தோடும் நம்பிக்கையோடும் மரியாவிடம் நமது வேண்டுதல்களை எழுப்பினால் அமைதியின் அரசியாகிய அவர் அமைதியை விரும்பும் தனது அன்பு மகனிடம் நமக்காக பரிந்து பேசுவார். உலகின் எல்லாப் பகுதிகளிலும் அமைதி நிலவும். 1917 ஆம் ஆண்டு தூய கன்னிமரியா போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள பாத்திமாவில் காட்சி கொடுக்கும் போது தனது மரியாவின் மாசற்ற இதயத்திற்கு ரஷ்யாவை அர்ப்பணிப்பதே அமைதிக்கான ஒரே வழி என்றார். அன்னையை காட்சியில் கண்ட மூன்று குழந்தைகளும் கூறியவை: ரஷ்யா மனந்திரும்பவும் உலகில் அதனால் அமைதி நிலவவும் அந்நாட்டை எனது மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணியுங்கள். இல்லையேல் அது போர்களுக்கும் அனைத்து வகையான துன்புறுத்தல்களுக்கும் இட்டுச் செல்லும் என்று அந்தப் பெண் எங்களிடம் கூறினார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் 1984 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் நாள் இந்த அர்ப்பணத்தை மேற்கொண்டார். அப்போது காட்சி கண்டவர்களில் ஒருவரான சகோதரி லூசியா அன்னையின் விருப்பம் நிறைவேறியதாகக் கூறி மகிழ்ந்தார்.





சொல்லை அன்னை மரியாவுக்கு பயன்படுத்துகிறார். தியோடோகோஸ் என்ற கிரேக்கச் சொல்லைக் கடவுளைத் தாங்கியவர் அல்லது கடவுளைப் பெற்றெடுத்தவர் என்ற பொருள் தரும் சொல்லாக பயன்படுத்துகிறார்.

**'தியோடோகோஸ்' என்ற சொல் சார்ந்த வரலாறு**

தியோடோகோஸ் என்ற கிரேக்கச் சொல்லுக்கு பல அர்த்தங்கள் இருந்தாலும் ஆழமான கருத்தாக கடவுளைத் தாங்கியவர் என்ற பொருளைத் தருவதாக அமைகிறது. தமதிருத்துவத்தின் இரண்டாம் ஆளாகிய கிறிஸ்துவும் கடவுள்தான்; கடவுளின் மகன்தான்; எனவே, புனித சிரில் அவரின் கூற்றுப்படி கடவுளின் மகனாகிய கிறிஸ்துவும் நூற்றுக்கு நூறு கடவுள்தான்; அன்னை மரியாஅந்த நூற்றுக்கு நூறு சதவீதம் கடவுளாகிய கிறிஸ்துவைப் பெற்றெடுத்ததால் 'கடவுளைத் தாங்கியவர்' எனப் பொருத்தமாக அழைக்கப்படுகின்றார் என்று புனித சிரில் ஆழமான இறையியல் சார்ந்த கருத்துகளை பகிர்ந்தளிக்கிறார்.

**நெஸ்டோரியஸின் எதிர் சிந்தனை**

நெஸ்டோரியஸின் என்பவர் 4-ம் நூற்றாண்டில் ஏறக்குறைய 451-ம் ஆண்டு காண்ஸ்டான்டிநோப்பு-லின் ஆயராக இருந்தவர்; பெர்சியா நாட்டை பூர்விகமாகக் கொண்டவர்; துறவியாகவும் வாழ்ந்தவர்; தியோஸியுஸ் என்ற உரோமை ஆட்சியாளரால் காண்ஸ்டான்டிநோப்பு-லின் ஆயராக பணியமர்த்தப்படுகிறார்; ஆயராக பணிப்பொறுப்பில் இருக்கும் நேரத்தில் அன்னை மரியாவுக்கென்று வழங்கப்பட்ட தியோடோகோஸ் என்ற சொல்லின் அர்த்தத்தை எதிர்த்து பேசினார்; அன்னை மரியா கடவுளைத் தாங்கியவர் அல்ல என்று வாதிட்டார்; அவர் மனிதராகிய கிறிஸ்துவை மட்டுமே தாங்கியவர் என்று சொல்லி தமது வாதத்திற்க்கு கிறிஸ்டோடோகோஸ் என்ற கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்துகிறார். கிறிஸ்டோடோகோஸ் என்ற கிரேக்கச் சொல்லுக்கு அர்த்தம் தருகின்றபோது அவர் கிறிஸ்துவின் தெய்விகத்தன்மையை முற்றிலும் எதிர்த்துப் பேச தொடங்கினார். அன்னை மரியா கடவுளின் மகனாகிய மனிதராகிய கிறிஸ்துவை பெற்றெடுத்ததால் கிறிஸ்டோடோகோஸ் என்று சொல்லி வாதிட்டார். இது முற்றிலும் தவறு என்று புனித சிரில் ஆணித்தரமாக எடுத்தியம்புகிறார்.

**இரண்டாம் எபேசு பொதுச்சங்கம்**

431-ம் ஆண்டு எபேசு நகரில் இச்சங்கம் நடைபெற்றதால் இது எபேசு பொதுச்சங்கம் என்று அழைக்கப்படுகின்றது. இயேசுவின் மனித தன்மையையும் தெய்வீகத் தன்மையாகிய இறைத்தன்மையையும் உறுதிப்படுத்த இந்த பொதுச்சங்கம் கூட்டப்பட்டது; திருத்தந்னை முதலாம் செலஸ்டின் என்ற திருத்தந்தையின் இச்பொதுச்சங்கம் செயல்பட்டது; திருத்தந்தை முதலாம் செலஸ்டின் கேட்டுக்கொண்டதன் பேரில் அலெக்ஸான்ரியாவின் ஆயரான புனித சிரில் முன்னிற்று வழிநடத்தி நெஸ்டோரியஸின் கூற்றுகளை நிலைகுயைச் செய்தார். கிறிஸ்துவின் ஒற்றுமை தன்மையை பற்றி புனித சிரில் கூறும்போது கடவுளும் மனிதருமாகிய கிறிஸ்துவின் ஒற்றுமை தன்மையை மீண்டும் மீண்டும் ஆழப்படுத்தி அறிக்கையிட்டார். கடவுளின் மகனாகிய கிறிஸ்து அன்னை மரியாவின் திருவயிற்றில் இருந்து பிறக்கும்போதே அவரே நூற்றுக்கு நூறு மனிதராகவும் நூற்றுக்கு நூறு கடவுளாகவும் இருந்தார் என்று அழுத்தம் திருத்தமாக அறிக்கையிட்டார். எனவே கடவுளின் மகனாகிய கிறிஸ்துவைப் பெற்றெடுத்ததால் அன்னை மரியாவை கடவுளைத் தாங்கியவர் அதாவது தியோடோகோஸ் என்று அழைத்தார்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருள்பணி. டோமினிக் ம.ஊ.ச
சென்னை

21



சென்ற மாத இதழில் புனித அகஸ்டின் பார்வையில் லூக்கா நற்செய்தி 11: 27-28 இறைவார்த்தையின் அடிப்படையில் கூட்டத்திலிருந்த ஒரு பெண் கூறிய “உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்” என்ற வார்த்தையைக் குறித்து சிந்தித்தோம். இந்த மாதக் கட்டுரையில் எருசலேம் நகரத்து புனித சிரில் நெஸ்டோரியஸின் கருத்துகளுக்க எதிராக கூரிய கருத்துகளை குறித்துப் பார்ப்போம்.

எருசலேம் நகரத்து புனித சிரில் அவர்களின் வாழ்க்கை குறிப்பில் சில திருஅவையில் தொடக்க கால வரலாற்றில் புனித சிரில் தனது இறையியல் படிப்பனையால் கி.பி 350-ம் ஆண்டில் இறுதி நாட்களில் எருசலேம் ஆயராக பணிபொறுப்பேற்கிறார். ஆனால் பல்வேறு எதிர்ப்புகள் மற்றும் நெஸ்டோரியஸ் போன்றோரின் எதிர் சிந்தனையின் காரணமாக ஒன்றுக்கு மேற்பட்டமுறை நாடு கடத்தப்படுகிறார் (அ) சிறையில் அடைக்கப்படுகிறார். எருசலேம் நகரத்து அப்போதைய ஆயர் மேக்ஸிமுஸ் என்பவரால் குருவாக திருநலைப்படுத்தப்பட்டு கி.பி 350-ம் ஆண்டு காலக்கட்டத்தில் ஆயர் மேக்ஸிமுஸ்க்கு பிறகு அலெக்ஸான்ரியாவின் ஆயராக பணிப்பொறுப்பேற்கின்றார்.

## இறையியல் கருத்துகள்

புனித சிரில் ஆற்றிய இறையியல் சார்ந்த சொற்பொழிவுகள் தான் அன்னை மரியாவைப் பற்றிய பேசிய முதன்மையான செய்திகளாக அமைகிறது. அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் மொத்தம் 24; அவற்றில் மொத்தம் 18 சொற்பொழிவுகள் திருமுழுக்கு சார்ந்த சொற்பொழிவுகளாக அமைகின்றன. 10,11, மற்றும் 12-ம் சொற்பொழிவுகள் இயேசுவின் புனித கல்லரை திருகோவிலிலிருந்து பெறப்பட்டவையாகும். இந்த மூன்று சொற்பொழிவுகள் தந்தையின் ஒரே மகனான இயேசு கிறிஸ்துவின் மனித தன்மையைப் பற்றி பேசுவதாக அமைந்துள்ளன. இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி இவர் பேசவில்லையென்றாலும் மேற்கூறிய மூன்று சொற்பொழிவுகளிலும் வார்த்தையாக இருந்த கிறிஸ்து அன்னை மரியா வழியாக மனித உரு எடுத்த நிகழ்வை மீண்டும் மீண்டும் அவர் வலியுறுத்தி கூறுகிறார். எருசலேம் நகரத்து நம்பிக்கை அறிக்கை என்பது இறைவார்த்தையை வழியாக உண்மையை எடுத்துரைக்க புனித சிரில் கையாண்ட யுக்தியாகும்.

## கடவுளைத் தாங்கிய அன்னை மரியா

புனித சிரில் ஆற்றிய சொற்பொழிவுகளில் 12-வது சொற்பொழிவு அன்னை மரியாவின் கன்னிமைத் தன்மையைப் பற்றி பேசுகிறது. அதிலே அவர், எசாயா 7:14, கலாத்தியர் 4:4 மற்றும் திருப்பால்கள் 22:9 ஆகிய இறைவார்த்தை பகுதிகளைப் பயன்படுத்தி, அன்னை மரியாவின் கன்னிமைத் தன்மையினை பற்றி கண் இமைக்காமல் எடுத்துரைக்கிறார். இந்த சொற்பொழிவுகளில் புனித சிரில் தியோடோகோஸ் என்ற கிரேக்கச்





போஸ்னியாவில் உள்ள மெட்ஜிகோர்ஜே என்ற இடத்தில் 1981 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் நாள் அன்னை அளித்த காட்சிகள் அவர் அமைதியின் அரசி என்ற பெயரோடு மிகவும் தொடர்புடையது. உரோமை கத்தோலிக்கத் திருஅவை ஜூலை 9 ஆம் நாள் இதை நினைவு நாளாகவும் சிறப்பிக்கிறது. அமெரிக்கா மற்றும் ஹவாய் தீவுகளில் ஜனவரி மாதம் 24 ஆம் நாள் இது நினைவு நாளாக அனுசரிக்கப்படுகிறது. அமைதியின் அரசி என்ற பெயர் அவருக்குப் பொருத்தமானது. ஏனெனில் சமாதானத்தின் இளவரசர் என்று இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்பட்ட மெசியாவின் அன்னை நம் மரியா. நமது அன்னை அமைதியின் அடையாளங்களான புறா, ஆலிவ் இலைகளைத் தாங்கியவராகத் திருஅவையின் மிகவும் இக்கட்டான வேளையில் அவர் தம் அன்பு மகனிடம் பரிந்துரைப்பவராக அவரது உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவே திருஅவை அமைதிக்கான மன்றாட்டாக, செபமாலை செபிக்கும் பழக்கத்தை மக்களிடையே ஊக்குவித்து வருகின்றது.

## இறைவன் விரும்பும் அமைதி

கடவுள் சிறந்த அழகிய உலகைப் படைத்தார். அனைத்தும் நல்லதெனக் கண்டார். முதல் மனிதர்கள் வாழ்ந்த ஏதேன் தோட்டம் போன்றே இந்த உலகில் உள்ள மனிதர்களும் படைப்புகளும் இதமாக, இணக்கமாக வாழ விரும்பினார். எனவே தான் ஆபேலைக் கொலை செய்த காயீனைப் பார்த்து நீ என்ன செய்து விட்டாய். இதோ உன் தம்பியின் குரல் என்னை நோக்கிக் கூப்பிடுகின்றதே என்று கூறினார். கொலைக்காரனுக்குத் தண்டனை வழங்கினார். இதைப் போன்றே இன்றும் அவர் உயிர்களை மதிக்க, போற்ற ஒவ்வொரு மனிதனையும் அழைக்கின்றார். இன்று ரஷ்யா-உக்ரைன், இஸ்ரயேல்-ஹமாஸ் தீவிரவாதிகள் இவர்களுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஈரான் என்று உலகமே அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருகிறது. இளைஞர்கள் தம் படிப்புகளைத் தொடராமல் சொந்த நாடுகளுக்குத் திரும்புகிறார்கள். முகாம்களில் உணவு பொருட்களைப் பெறச் சென்று கையேந்தி நிற்கும் சிறுவர், சிறுமியர் குண்டுகளுக்குப் பலியாகின்றனர். இரக்கமற்ற தலைவர்களின் வெறி, தங்களின் போர் ஆயுதங்களின் வல்லமையை வெளிப்படுத்தும் போக்கு, அணு ஆயுதங்களுக்கு செலவழிக்கப்படும் பணம் அனைத்தும் நம்மை கேள்விக்கு உட்படுத்துகின்றன. எனவே உலகில் எத்தகைய அமைதி நிலவ வேண்டும் என்று இறைவாக்கினர் எசாயா கூறியதை நாம் தியானிப்போம். உள்வாங்குவோம். இறைவனிடம் மன்றாடுவோம். ‘அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள், ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது அவர்கள் இனி ஒருபோதும் போர்ப்பயிற்சி பெற மாட்டார்கள்” (எசாயா 2:4). ‘அந்நாளில், ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும் அக்குட்டியோடு சிறுத்தைப் புலி படுத்துக் கொள்ளும். கன்றும், சிங்கக்குட்டியும், கொழுத்த காளையும் கூடி வாழும் பச்சிளம் குழந்தை அவற்றை நடத்திச் செல்லும்” (எசாயா 11:6). இந்த இரண்டு பகுதிகளையும் நாம் இணைத்து வாசிக்கும் போது போர்களற்ற சூழல் மட்டுமல்ல, அமைதியும் நட்பும் சகோதரத்துவமும் அங்கு நிலவ வேண்டும் என்பது இந்த இறைவாக்குகள் வழியாக இறைவன் நாடுகளின் தலைவர்களுக்கு அறிவுறுத்துகின்றார். அதிகாரம் அனைத்தும் ஆண்டவருக்கே சொந்தம். அவரிடமிருந்தே இவர்கள் அதைப் பெறுகின்றனர். இதை அவர்கள் உணர நாம் இறைவனை மன்றாடுவோம்.

## இயேசு தரும் அமைதி

இறைமகன் இயேசு ஒரு குழந்தையாய்ப் பிறந்த போது வானதூதர் முழங்கியது. ‘பூவுலகில் நன்மனத்தோருக்கு அமைதி உண்டாகுக”. அதுவே உன்னதத்தில் இறைவனுக்கு மாட்சி. இயேசுவின் பொது வாழ்வில் தமது சீடர்களை இறையாட்சிப் பணிக்காக அனுப்பிய போது அவர்கள் செல்லும் இல்லங்களில் அமைதி உண்டாகுக என்று கூற அறிவுறுத்தினார். தமது

இவ்வுலக இறுதி நாள்களில் சீடர்களுக்காக விண்ணகத் தந்தையிடம் மிக உருக்கமாக மன்றாடினார். 'எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக" என்பது அவரது இறைவேண்டல் மட்டுமல்ல, அவரது ஏக்கப் பெருமூச்சு. அந்த ஏக்கம் இன்று உலகமெங்கும் ஒலிக்கின்றது. ஆனால் அமைதியை ஏற்படுத்த வேண்டிய தலைவர்கள் அமைதியின்மையை உண்டாக்குவது இறைவனின் திருவுளத்திற்குப் புறம்பானது. உமது ஆட்சி வருக உமது விருப்பம் நிறைவேறுக" என்று ஒவ்வொரு நாளும் நாம் செபிப்பது அர்த்தமற்றதாக இருக்கிறது. எனவே இந்நாள்களில் செய்தித்தாளில் வரும் செய்திகளை வாசிக்கும் போது உலக தலைவர்களுக்காக சிறப்பாக மன்றாடுவோம். மக்களின் அமைதியான, மகிழ்ச்சியான வாழ்வு, அவர்கள் நிறைவாக உணவு உண்பது, அவர்களுக்கென்று சொந்த உறைவிடங்கள் அமைத்துத் தருவது போன்ற அடிப்படை உரிமைகளை வழங்க அவர்களில் பரிவிரக்கம் சுரக்க வேண்டும் என்று செபிப்போம்.

**மரியாவின் அமைதியான வாழ்வு**

மரியா ஒரு அமைதிப் புறா. எளிய குடும்பத்தில் பிறந்தார். மனிதர் முன்னிலையில் சுவக்கீன், அன்னா இருவரும் சாதாரணமானவர்களாகத் தோன்றினாலும் இறைவன் முன் ஆசிர்வதிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். அவர்தம் அன்பு மகள் இறையருளால் நிறையப் பெற்று அவர் திருமுன் பேறுபெற்றவராகத் திகழ்ந்தார். மெசியாவின் தாயை மிகப் பக்குவமாக உருவாக்கி வந்தார். தனிமையிலும், ஏகாந்தத்திலும், அமைதியிலும், மௌனத்திலும், ஆழ்ந்து சிந்திப்பதிலும் அன்னை மரியா தேர்ச்சி பெற்றவராக இருந்தார். இறைவாக்கினர்கள் சிமியோன், அன்னா போன்ற ஆளுமைகளால் மூன்று வயதிலிருந்தே எருசலேம் ஆலயத்தில் வளர்க்கப்பட்டு வந்தார். மெசியா விரைவில் பிறக்க வேண்டும் தனது இஸ்ரயேல் மக்கள் அனைவரும் அனைத்து அடிமைத்தனங்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டுமென்று மன்றாடினார். அவரது வேண்டுதல் கேட்கப்பட்டது. இளநங்கை மரியாவை வானதூதர் சந்தித்து அந்த மாபெரும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்ட போது அமைதியாய் பதில் அளித்தார். அப்பதிலுக்கு முன்னால் அவர் எழுப்பிய நியாயமான கேள்வியின் போது விண்ணகம் ஒரு கணம் ஆழ்ந்த அமைதியில் மூழ்கியது. மங்கள வார்த்தையைப் பெற்றதும் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும ஆவியாரின் வல்லமை உணர்ந்தவராய் யூதேய மலை நாட்டிற்கு விரைந்தார். நாசரேத்து இல்லம் திரும்பிய பின் புனித வளனாரின் புரிந்து கொள்ளாத தொடக்க நிலையில், அக்கம் பக்கத்தினரின் ஏற்ற, இறக்கப் பார்வை அனைத்திலும் ஆழ்ந்த அமைதி, அப்படியே ஆகட்டும் கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கண்ணோக்கினார் என்ற நற்சிந்தனைகளை, இறைவாக்கை உள் மனதில் ஒலித்துக் கொண்டே இருந்தார். 'ஏன் என்னைத் தேடினீர்கள்" என்ற மகனின் பதிலுக்கு மறு கேள்வி கேட்கவில்லை இந்தத் தாய். அமைதியில் தனது மகனை வளர்த்து எடுத்தார். அவர் குரல் தெருவில் கேட்காது. மயிர்க்கத்தரிப்போரின் முன் கத்தாத செம்மறியாக வளர்ந்தார். தன் மீது சிலுவை சுமத்தப்பட்ட போதும், ஆடைகள் களையப்பட்டு அவமானப்பட்ட போதும், தனது உயிரை தந்தையின் கையில் ஒப்படைக்கும் போதும் இயேசு அமைதியாக இருந்தார். இந்த அமைதியில் அன்னைக்கும் பங்கு உண்டு. அன்னையும் அமைதியாகத்தான் நின்று கொண்டிருந்தார். ஆயிரம் வாட்கள் அவர் இதயத்தை ஊடுருவி நின்றன. அசையாமல், துவழாமல் சிலுவை அடியில் துணிவுடன் வீரப் பெண்ணாக நின்றார். ஆழ்ந்த அமைதியில் இருக்கும் மரியா முழக்கமிடவும் அறிந்தவர். மெசியாவின் புரட்சிகர இறையாட்சி செயல்களை விடுதலைக் கீதமாக முழங்கினார். இன்றும் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆலயங்களிலும் அர்ப்பணிக்கப்பட்டோரின்

தொடர்ச்சி 27 ம் பக்கம்..........





திருப்பலியில் பங்கெடுத்தல் அல்லது திருப்பலியில் பங்கெடுக்க முடியாதபோது நற்கருணை ஆண்டவரை சந்தித்து ஆராதித்தல், நாள்தோறும் குடும்பமாக கூடி செபமாலை செபித்தல், தினந்தோறும் அரை மணி நேரமாவது இறைவார்த்தையை வாசித்து தியானித்தல், மாதத்திற்கு ஒருமுறையாவது ஒப்புரவு அருட்சாதனம் பெறுதல், வாரத்திற்கு ஒருநாள் உபவாசம் இருத்தல் ஆகியவற்றை நாம் கடைபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளும் போது நீங்களும் உங்கள் பிள்ளைகளும் கடவுளின் ஆசீரால் நிரப்பப்படுவீர்கள். இன்று நம்முடைய கத்தோலிக்க கிறிஸ்தவ வாழ்விற்கு இடையூறாக ஒரு கோலியாத்து மட்டுமல்ல, எண்ணற்ற கோலியாத்துகளை நாம் எதிர் கொள்ள வேண்டியுள்ளது. 1 சாமுவேல் 17:49 இல் தாவீது எறிந்த கல் கோலியாத்தின் நெற்றிக்குள் பதிந்து அவனை முகம் குப்புற கீழே விழச் செய்தது என்பதை காண்கிறோம். நம்முடைய செயல்களும் தாவீது போல இருக்க வேண்டும். அப்போது கடவுள் நம்மோடும் நம்முள்ளும் இருந்து நம்மை வழிநடத்தி ஆசீரவதிப்பார்.

**எண்ணற்ற கோலியாத்துகளை வெற்றிகொள்ளும் வழிமுறை:**

இராணுவத்தில் பணியாற்றும் போர்வீரர்கள் எல்லையில் பணியாற்றும் போது எதிரிகள் உள் நுழைந்து விடாமல் இருக்க இரவுபகல் என்று பாராமல் இருபத்து நான்கு மணி நேரமும் விழிப்பாயிருந்து எல்லையை காவல்காத்து வருவார்கள். அவர்கள் சற்று அயர்ந்து விட்டாலும் எதிரிகள் உள் நுழைந்து விடுவார்கள். தொடக்க நூல் 4:7 இல் கடவுள் காயினிடம், நீ நல்லது செய்தால் உயர்வடைவாய். நீ நல்லது செய்யாவிட்டால் பாவம் உன் மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடக்கி ஆள வேண்டும். என்று கூறுகிறார். பாவம் என்பதை பாம்பு என்று எடுத்துக்கொள்வோம். பாம்பு நம் வீட்டு வாயிலில் படுத்திருந்தால் நாம் அமைதியாக இருக்க முடியுமா? பாம்பை அடித்து விரட்ட வேண்டும் அல்லது பாம்பை அடித்து கொல்ல வேண்டும். அதுவரை நாம் அமைதியடைய முடியாது. பாம்பை அடித்துக் கொல்ல ஒரு அடி அடித்தால் போதுமானதாக அமையாது. மாறாக அது சாகும் வரை அடிக்க வேண்டும். அவ்வாறெனில் நம் வாயிலில் படுத்திருக்கும் பாவத்தை வெற்றிகொள்ள கடவுள் திருச்சபை வழியாக தருகின்ற அனைத்து ஆயுதங்களையும் நேரம் காலம் என்று பார்க்காமல் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். எனவே கத்தோலிக்க திருச்சபை தருகின்ற அனைத்து ஞான ஆயுதங்களையும் பயன்படுத்தி எல்லா கோலியாத்துகளையும் வெற்றி கொண்டு கடவுளை மகிமைப்படுத்தி கடவுளின் கருணையையும் ஆசீரையும் நிறைவாகப் பெற்றுக் கொள்வோம்.

மரியே! எங்கள் நல்ல ஆசிரியையே! வாழ்க!



# பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 9

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

கடவுளின் உரிமை சொத்தான கத்தோலிக்கப் பொதுநிலையினராகிய நாம் ஆசிரியருக்கெல்லாம் ஆசிரியராம் சேசுவுக்கு அமுதூட்டும் போதே அனைத்தையும் ஊட்டி வளர்த்த அன்னை மரியாவை நம் ஆசிரியையாக ஏற்றுக்கொண்டு அவர் கற்றுத்தரும் பாடங்களை நன்கு கற்றுக் கொண்டு பரமபிதாவுக்கு மிகவும் பிரியமுள்ள மகனாக மகளாக வாழ்ந்திட முயற்சிகள் மேற்கொள்ள, கடவுளுக்கு அஞ்சுதல் என்பதை பற்றி வி.ப.1:15-21 என்னும் விவிலிய பகுதியை அன்னை மரியாவை ஆசிரியையாகக் கொண்டு சிந்தித்தோம். அதன் அடிப்படையில் இரண்டாவதாக அன்னை மரியாள் நமக்கு கற்றுத் தரும் பாடங்களை கவனமுடன் வாசித்து சிந்திப்போம்.

**அன்னை கற்றுத் தரும் பாடம்:**

என் அன்பு மகனே! மகளே! இன்று நான் உனக்கு கற்றுத்தரும் பாடம் என்னவென்றால் நல்ல கத்தோலிக்க கிறிஸ்தவனாக கிறிஸ்தவளாக வாழ்வதற்கு கோலியாத்து போன்ற எதிரிகளை வெற்றி கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதற்காக நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புவது, 'தாவீது தம் கோலைக் கையில் எடுத்துக்கொண்டார். நீரோடையிலிருந்து வழுவழுப்பான ஐந்து கூழாங்கற்களைத் தேர்ந்தெடுத்து இடையனுக்குரிய தம் பையில் போட்டுக் கொண்டார். தம் கவணைக் கையில் பிடித்துக் கொண்டு பெலிஸ்தியனை நோக்கிச் சென்றார்.' (1 சாமுவேல் 17:40) என்னும் இறைவார்த்தையாகும். இதில் தாவீது கோலியாத்தை வெற்றி கொள்ள எடுத்துக் கொண்ட ஐந்து கூழாங்கற்களை, ஐந்து வகையான ஞான ஆயுதங்களாக உருவகித்து காணவேண்டும். ஆன்மீக வாழ்வின் எதிரிகளை வெற்றி கொள்ள கடவுள் திருச்சபை வழியாக உங்களுக்கு கொடுத்துள்ள ஆயுதங்கள் எவையென்றால் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும், செபமாலை, இறைவார்த்தையை வாசித்து தியானித்தல், ஒப்புரவு அருட்சாதனம், உபவாசம் என்பவையே. அன்புப் பிள்ளைகளே! இவற்றை வாழ்வாக்க முயற்சி செய்யுங்கள்.

**அன்னையின் பாடத்தை நடைமுறை வாழ்வில் செயல்படுத்துதல்:**

கோலியாத்து போன்ற ஆன்மீக வாழ்வின் எதிரிகளை வெற்றி கொள்ள அன்னை நமக்கு கற்றுத்தரும் பாடம் தினந்தோறும்





# அன்னையின் 79 திருத்தலங்களை நோக்கி...


அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## ∴ போர்வியேரே அன்னை பேராலயம், லியோன், பிரான்சு

∴போர்வியேரே என்பது லியோன் நகரின் பழமையான பகுதியின் வட பகுதியில் அமைந்துள்ள பகுதியாகும். இங்கு, கி.மு. 43 ஆண்டிலிருந்தே உரோமையர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. இப்பகுதியில் உள்ள ஒரு குன்றின் மீது கட்டப்பட்ட அன்னைக்கு நேர்ந்தளிக்கப்பட்ட ஆலயமானது ∴போர்வியேரே அன்னை பேராலயம் என்றழைக்கப்படுகிறது.

தற்போது காணப்படும் வானுயர்ந்த ஆலயமானது சில நன்கொடையாளர்களின் உதவியுடன் கி.பி. 1872ஆம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டு, கி.பி. 1896ஆம் ஆண்டு நிறைவுபெற்றது.



லியோன் நகரின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்த இந்த ஆலயம் ஒரு நீண்ட வரலாறு உடையதாகும். கி.பி. 1643ஆம் ஆண்டு ஐரோப்பிய கண்டம் புபோனிக் கொள்ளை நோய்க்கு உள்ளானது. ஆயிரக்கணக்கான

மக்கள் எல்லாப் பகுதிகளிலும் மாண்டனர். லியோன் நகரத்தையும் இந்நோய் விட்டுவைக்கவில்லை. லியோன் நகரத்து மக்கள், தாங்கள் இந்நோயிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுதலை அன்னையின் திருவடிகளில் சமர்ப்பித்தனர். கொள்ளை நோயிலிருந்து நகரம் பாதுகாக்கப்பட்டால் அன்னைக்கு ஒரு ஆலயம் கட்டி நேர்ந்தளிப்பதாக வாக்குறுதி கொடுத்தனர். புபோனிக் கொள்ளை நோயின் தாக்கத்திலிருந்து லியோன் நகர் பாதுகாக்கப்பட்டது. லியோன் நகர மக்களும் தாங்கள் அன்னைக்கு தந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் ஆலயம் ஒன்றைக் கட்டி நேர்ந்தளித்தனர்.

அன்னையின் பரிந்துரையால் தாங்கள் பெற்றுக் கொண்ட நலன்களுக்காக, லியோன் நகர மக்கள் அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 8ஆம் தேதி அன்னைக்கு விழா எடுத்தனர். அன்னை மரியாள் அமல உற்பவி என்கிற வேதசத்தியம் திருஅவையால் கி.பி. 1854ஆம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் அவர்களால் அறிவிக்கப்பட்டது என்றாலும், விசுவாசிகளின் உள்ளத்திலும், வழிபாடுகளிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்ததை நம்மால் உணர முடிகிறது. ஒளியின் விழா என்றழைக்கப்பட்டு கொண்டாடப்பட்ட இந்நாளில், லியோன் நகரமே விழாக்கோலம் பூண்டிருக்கும். மக்கள் எரியும் திரிகளை கைகளில் ஏந்தியவர்களாக அன்னையின் ஆலயம் எழுந்தருளியிருக்கும் குன்றின் மீது பவனியாக ஏறிச் சென்று அன்னைக்கு தங்கள் நன்றிகளை காணிக்கையாக்குகின்றனர்.







8-ம் பக்க தொடர்ச்சி.........

நாவிலும் ஒவ்வொரு நாளும் இப்பாடல் ஒலிக்கின்றது. இத்தகைய புரட்சியினால் உருவாகும் நீதியான சமுதாயத்தினால் மட்டுமே அமைதி உருவாக முடியும். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற நிலை ஒழிய வேண்டும். வலியோர் அரியணை நின்று அகல வேண்டும். பசியுற்றோர் நிரப்பப்பட வேண்டும். நெஞ்சிலே தாழ்ச்சி நிறைய வேண்டும். அப்போதுதான் இறைவனைத் தரிசிக்க முடியும்.

## நிறைவுரை

ஜூபிலி ஆண்டு 2025 உலகளாவிய சகோதரத்துவம் மலர வேண்டும். ஏழைகளோடு தோழமை உறவு கொள்ள வேண்டும். திருமுழுக்கு பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களும் ஒன்றிணைய வேண்டும். அழிந்து வரும் இயற்கை பேணப்படவேண்டும் என்ற நான்கு பரிமாணங்களை நம்முன் வைக்கின்றது. நம்பிக்கை ஆண்டின் நாயகியான அன்னை மரியா நமக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். அவர் வாழ்ந்த நாசரேத்து இல்லத்தில் அமைதி காத்தார்.

தான் சார்ந்த சீடர் குழுமத்தில் ஒற்றுமையைக் காத்தார். ஆதித் திருஅவை உருவாக செபத்தில் மூழ்கினார். ஆவியாரின் வல்லமையை நிறைவாகப் பெற்றார். மரியாவைப் பின்பற்றி நாமும், நாம் இருக்கும் இடங்களில், நிறுவனங்களில், இல்லங்களில் உலக சகோதரத்துவத்தின் அடையாளங்களாக இருப்போம். அப்போது எங்கும் அமைதியும், மகிழ்வும், ஒற்றுமையும் பிறக்கும். இறையாட்சி மலரும்!

அன்பு செய்ததைப் போல நீயும் இவர்களை அன்பு செய்வாயா? ஏன்று இயேசு மரியாவிடம் கேட்டிருக்க வேண்டும். இன்று அன்னையின் அன்பு அவலத்தையும் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. பொறாமையோ, வெறுப்போ, வஞ்சகமோ, கெட்ட நடத்தையோ, தீய சக்தியோ, வன்முறையோ அன்னையின் அன்பை அழிக்க முடியாது. ஏனெனில் அன்னையின் அன்பு இறப்பையும், நரகத்தையும்விட ஆற்றல் வாய்ந்தது(புனித பீட்டர் தமியான்).

இன்று உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களையும் கணக்கெடுத்தால் 60 விழுக்காட்டிற்கு மேலாக அ்னையின் பெயரில்தான் உள்ளன. இவையெல்லாம் அன்னையின் அன்பிற்கு அகிலம் தந்த பரிசு. இவ்வாறு அன்பு என்ற தர்மத்தால் தலைநிமிர்ந்து நிற்கிறார் நம் அன்னை.

2.தாழ்ச்சி

தாழ்ச்சி என்ற தர்மத்தால் தலைநிமிர்ந்து நிற்கிறார் நம் அன்னை மரியா. தாழ்ச்சியே அனைத்து நற்பண்புகளின் பொக்கிஷமாகும் என்கிறார் புனித பேசில். கபிரியேலின் வாழ்த்துகளால் மரியா கலங்கியதாக விவிலியம் கூறுகிறது. (லூக் 1:26-29) மரியா அத்தூதரை கண்டதால் கலங்கினாளா? இல்லை. ஏனெனில் வானதூதர்களின் சந்திப்பு மரியாவுக்கு பரிச்சயப்பட்டிருந்தது என்று புனித அக்குவினாஸ் கூறுகின்றார். அருள் நிறைப் பெற்றவர் ஆண்டவர் உம்முடனே, அதிதூதரின் உயர்வான வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள முடியாமல் தயங்குகிறது.

புனித பொனவெந்தூர் அழகாக கூறுகின்றார் எவ்வளவு பேறுபெற்றது அன்னையின் தாழ்ச்சி. அதிதூதரால் வாழ்த்தப் பெறுகிறார். அருள் நிறைந்தவளே என்று போற்றப்படுகிற தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுகிற உன்னத கடவுளின் தாயாகிற விண்ணுக்கும் அரசியாக ஆக்கப்படுகிறார். இவற்றால் பெருமையோடு தலைநிமிர்ந்து நிற்பதற்கு பதிலாக தாழ்ந்து நிற்கின்றார். நான் ஆண்டவரின் அடிமை என்று பதிலளிக்கின்றார். தாழ்ச்சியின் தர்மத்தால் தலை நிமிர்ந்து நிற்கிறாள் நம் அன்னை மரியா.

3.தாய்மைக்கு நன்றிக்கடன்

நன்றியின் தர்மத்தால் தலை நிமிர்ந்து நிற்கிறார் அன்னை மரியா. தனது பாடலில் மரியா கடவுளை நன்றி பாராட்டுகின்றார் (1.46-56). தனது தாழ்நிலையை கடவுள் கண்ணோகக்கியதால் நன்றி உணர்வோடு மரியா பாடுகின்றார். மரியாவிடம் தாழ்நிலை இருந்ததா? இருந்தது. அதாவது யூத சமுதாயதத்தில் கன்னிமை என்பது மலட்டுத் தன்மைக்கு சமமானது. அவர்கள் சமுதாயத்தில் தாழ்வாக கருதப்பட்டனர். உதாரணமாக இப்தாவின் ஒரே மகள், தனது கன்னிமை குறித்து மலைகளில் துக்கம் கொண்டாடியதாகப் பழைய ஏற்பாட்டில் பார்க்கின்றோம். (நீதி 11:37) எனவே யூதப் பெண்ணை மரியாவும் தனது கன்னிமை ஒரு சாபக்கேடு என்று ஒருவேளை நினைத்து இருக்கலாம். அவ்வேளையில்தான் நீர் கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர் என்ற உன்னத கொடை மூலம் மரியா தாய்மை அடைந்து தனது தாழ்நிலையிலிருந்து உயர்த்தப் பெறுகின்றார். இதற்கு நன்றிக் கடனாக மரியா கடவுளுக்கு நன்றிப் புகழ்பாடி நன்றியின் தர்மத்தால் தலை நிமிர்ந்து நிற்கின்றார்.


இறை தர்மத்தை பிரதிபலித்த மரியா, தர்மத்தின் கண்ணாடி என்று அழைக்கப்படுகிறார். கண்ணாடி தன் முன்னே நிற்கும் உருவத்தை அப்படியே முழுமையாக பிரதிபலிக்கிறது. அதாவது, அந்த உருவத்திற்கு நிகர் அந்த உருவத்திற்கு நிகர் அந்த உருவம் மட்டுமே. அதுபோல தர்மத்திற்கு நிகர் நம் தாய் மரியா மட்டுமே. எனவேதான் தர்மத்தின் கண்ணாடியே என்று பக்தர்கள் மணிமுடி சூட்டி அழகு பார்க்கின்றவர்.






தொடர்ச்சியாக, கி.பி. 1832ஆம் ஆண்டு ஏற்பட்ட காலரா நோயிலிருந்தும், கி.பி. 1870ஆம் ஆண்டு புதிய படையெடுப்பின் போது அன்னையின் அரவணைப்பில் இருந்த இந்நகரம் பாதுகாக்கப்பட்டது. வரலாற்றில் மிகப்பெரிய சோதனைக் காலங்களில் மக்கள் அன்னையின் பாதுகாப்பை உரிமையுடன் வேண்டி பெற்றுக்கொண்டனர்.
பாரீஸ் மற்றும் லியோன் நகரங்களை கம்யூனிஸ்ட்கள் கைப்பற்றி அங்கிருந்த ஆலயங்களுக்கும், வழிப்பாட்டு இடங்களுக்கும் அவசங்கை ஏற்படுத்திய விளைவே, இந்நகரங்களில் கட்டப்பட்ட மிகப்பெரிய ஆலயங்கள் ஆகும். பாரீஸ் நகரில் கட்டப்பட்ட திரு இருதய பேராலயமும், லியோன் நகரில் கட்டப்பட்ட ∴போர்வியேரே அன்னை பேராலயமும் இதற்கு சான்றுகளாகும்.

∴போர்வியேரே குன்றின் மீது அமைந்துள்ள இப்பேராலயமானது, நகரின் எப்பகுதியில் இருந்து பார்த்தாலும் அனைவரும் காணும் விதமாக கட்டப்பட்டுள்ளது. லியோன் நகரின் அழியா அடையாளமாக அமைந்துள்ள இப்பேராலயத்தின் வடிவமைப்பை பியேரே போஸ்ஸான் என்பவர், ரொமெனெஸ்கோ மற்றும் பைசாந்திய கட்டிட கலைகளின் கலவையாக உருவாக்கினார். இக்கட்டிக்கலையின் பிணைப்பானது மிக விந்தையாக பார்க்கப்பட்டது. இப்பேராலயமானது 86 மீட்டர் நீளமும், 34 மீட்டர் அகலமும் உடையது. இப்பேராலயத்தில் நான்கு கோபுரங்கள் உள்ளன. ஐந்தாவதாக அமைந்துள்ள மணிக்கூண்டில் மேல் அன்னையின் திருச் சுரூபமானது வைக்கப்பட்டுள்ளது.



ஆலயத்தில் உள்ள மொசைக் ஓவியங்களும், கண்ணாடி ஓவியங்களும் காண்போரின் உள்ளத்தை கவர்கின்றன. லியோன் நகரத்து வருகின்ற சுற்றுலா பயணிகள், இந்த ஓவியங்களை பார்ப்பதற்காகவே ∴போர்வியேரே வருகின்றனர். இந்த ஆலயத்தில் புனித வளனாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிற்றாலயம் உள்ளது.

∴.போர்வியேரேவில் இரண்டு அடுக்குகள் உள்ளன. மேல் தளத்தில் உள்ள ஆலயமானது மொசைக் மற்றும் கண்ணாடி ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேல் கோவில் மூன்று குழைவு கோபுரங்களையும், ஆறு கண்ணாடி ஓவியங்களை உடைய சன்னல்களையும் கொண்டுள்ளது. இச்சன்னல் வழியாக பாயும் ஒளியானது ஆலயத்தின் அழகை மேன்மைப்படுத்துகிறது. இந்த ஆலயத்தில் அழகும், உயரிய தரமும் உடைய கர்ராரா பளிங்கு கற்களும், வடக்கு இத்தாலியிருந்து கொணரப்பட்ட ரோஸ் நிற கிரானைட் கற்களும், ஆல்ப்ஸ் மலையில் அமைந்துள்ள சவோய் பகுதியிலிருந்து கொணரப்பட்ட நீல, பால்வெண்மை, பச்சை நிற பளிங்கு கற்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிறங்கள் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தின் உட்பகுதி ஒரு வண்ண விளையாட்டை நம் கண்முன் கொணருகின்றன.




இந்த ஆலயமானது மூன்று மையபகுதிகளையும், மூன்று பக்கவாட்டு பகுதிகளையும் கொண்டுள்ளது. இப்பெரிய ஆலயமாத்தில் 16 மிகப்பெரிய தூண்கள் அமைந்துள்ளன. இத்தூண்கள் அனைத்தும் கலைநயத்துடன் கட்டப்பட்டுள்ளன. இங்கு எட்டு சிற்றாலயங்கள் உள்ளன. கீழ் தள ஆலயமானது மிக எளிமையான முறையில் கட்டப்பட்டுள்ளது.

ஆலயத்தின மேல் பகுதிக்கு செல்ல வளைவு படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. இறைவனை நோக்கிய நம் பயணத்தில் ஏற்றங்களும், தாழ்வுகளும் உள்ளன என்பதையும், நம் பார்வைக்கு சில காரியங்கள் மறைக்கப்பட்டாலும் இறைவனின் பார்வையிலிருந்து நாம் ஒருபோதும் விலக்கப்படுவது இல்லை என்பதையும் இப்படிக்கட்டுகள் சுட்டிகாட்டுகின்றன.





# மாதா மன்றாட்டு மாலை



21

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச
மகாபலிபுரம் .

தர்மத்தின் கண்ணாடியே
தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
மீண்டும் தர்மமே வெல்லும்

தொடக்க நூலில் சூதானது(பாம்பு) இறை தர்மத்தினை ஏவாள் என்ற பெண்ணின் வழியாக கவ்வி மனித குலத்தைப் பாவம் என்ற பாதாளத்திற்குத் தள்ளி கடவுளின் மீட்பை மனுக்குலம் காண இயலாதவாறு செய்தது. ஆனால் புதிய ஏற்பாட்டில் மரியாள் என்ற பெண் அந்த சூதின் தலைதனை நசுக்கி தர்மத்தினை தலை நிமிரச் செய்து மீட்பை மனித குலத்திற்குத் தாரை வார்த்தார். எனவேதான் மரியா தர்மத்தின் தாயாக கண்ணாடியாக உலகெங்கும் அன்போடு அழைக்கப்படுகின்றார்.

இன்று தர்மம் என்றவுடன் நம் நினைவுக்கு வருவதெல்லாம் ஈகைத் திறன் மட்டுமே. அதுமட்டுமா தர்மம்? இல்லை. ஒவ்வொரு சொல்லும் அதற்குரிய தர்மத்தினை தன்னுள்ளே கொண்டுள்ளது. அன்னை மரியா அத்தகைய பண்புகளையே தன்னுள் கொண்டிருந்தார். தன்னுடைய வாழ்வின் எல்லாச் செயல்களிலும் அவர் தன்னையே முழுமையாக ஈடுபடுத்தி நிறைவேற்றியதன் மூலம் தன் வாழ்வின் எல்லாச் செயல்களிலும் தர்மம் காத்தவளாக தலை நிமிர்ந்து நிற்கின்றார்.

எனவே மரியா, தர்மத்தின் தலைகாக்க, எந்தெந்த வழிகளிலெல்லாம் தன்னை கையளித்தார் என்பதைச் சற்று விவிலியப் பின்னணியோடு உற்று நோக்குவோம்.

1.அன்பின் உருவம் மரியா!

மரியா என்றால் அன்பு, அன்பு என்றால் மரியா, பெண் ஒருவர் குழந்தை உண்டானதும், குடும்பத்திலிருந்து எண்ணிலடங்காப் பாதுகாப்பும் அக்கறையும் அவருக்கு அதிகமாகக் கிடைக்கும். குழந்தை பெற்றுவிட்டால் அவளின் தாய்மை கண்டு குடும்பமே கொண்டாடும். ஆனால், மரியா இயேசுவைக் கருதாங்கியதிலிருந்து இறப்பு வரை துயரமே மரியாவோடு பயணித்தது. (மத் 1:19, 2:13-14, யோவான் 19:25) அந்த துன்பங்களுக்கு மத்தியில் இயேசுவோடு பயணம் செய்யத் தூண்டியது அவரிடமிருந்த அன்புதான். தனது மகனுக்காக எத்தனை முறை வேண்டுமென்றாலும் இறக்கத் தயார் நிலையில் இருந்திருக்கக் கூடும் என்று புனித ஜான் யூட்ஸ் கூறுகிறார்.

அந்த தாயிடம்தான் நம்பிக்கையோடு நம் அனைவரையும் ஒப்படைக்கின்றார். (யோவான் 19:26-27) அடிமைகளாக அல்ல, வேலைக்காரர்களாக அல்ல, மாறாக குழந்தைகளாக அம்மா இதோ உன் மகன் அம்மா இவர்களே உன் குழந்தைகள் அவர்கள் மீதுள்ள அன்பினால்தான் இரத்தம் சிந்தியதை கண்கூடாக நீர் பார்த்துள்ளீர். நான்



# இறையடியார் மரியா ஜூலியானா



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

இறை அடியார் நற்கருணையின் மரியா ஜூலியானா (ஏஞ்சலா அரெனாரே)

ஏஞ்சலா அரெனாரே பிப்ரவரி 23, 1816 அன்று பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் மருத்துவர்கள். இதனால், குழந்தைப் பருவத்திலேயே சில அற்புதமான அனுபவங்களை பெற்றார்.

1838 முதல் அவரது ஆன்மிக தந்தையாக இருந்த அருட்தந்தை வின்சென்சோ கூறியபடி, ஐந்து வயதில், ஏஞ்சலா அவர்களுக்கு, கன்னி மரியா அவருக்கு முதன்முதலாக தோன்றி, அவர் ஒரு துறவியாகவும், அவரது மகனான சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவுடன் ஆன்மீக திருமணம் செய்து கொள்வார் என்று முன்னறிவித்தார். வயது 18 இல், அவரது ஆன்மீக வழிகாட்டியின் ஒப்புதலுடன், ஏஞ்சலா மரியின் ஊழியர் மூன்றாம் சபையில் சேர்ந்து இறைபணி செய்ய அனுமதிக்கப்பட்டார். 1836 செப்டம்பர் 23 அன்று, 20 வயதில், அவர் ஒரு மூன்றாம் சபை துறவியானார். இவ்வாறு, பிரார்த்தனை, தவம், தியாகம் மற்றும் கிறிஸ்துவின் துன்பங்களில் பங்கேற்பதில் தினசரி வாழ்க்கையை கழித்தார். 1842 ஜூன் 23 அன்று, நாபொலி மாகாணத்தின் ரெசினாவில் உள்ள புனித மோனிகா மரியின் ஊழியர் மடத்தில் சேரும் அவரது கனவு நிறைவேறியது. சபையில், பல ஆண்டுகளாக ஆசிரியராக விளங்கினார். மேலும், அவர் மடத்தின் தலைமை பொறுப்பிற்க்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார், இந்தப் பொறுப்பு மடவாழ்க்கையில் முக்கியமான பொருளாதார மற்றும் ஆன்மீக சீர்திருத்தங்களை செயல்படுத்த உதவியது. அவரது தனித்துவமான ஆசிர்வாதத்தில் ஒன்று, கர்த்தரிடம் மக்களின் நோய்களைக் குணப்படுத்தும்படி வேண்டி, அந்த நோய்களைத் தன்மேல் ஏற்றுக்கொள்வதாகும். 1836-1837 ஆண்டுகளில் நாபொலி நகரைத் தாக்கிய காலரா காலத்தில் இது 19 முறை நடந்ததாக நம்பப்படுகிறது. இவ்வாறு பலமுறை நோய்களை தன்மேல் வாங்கிக்கொண்டதால், 1857 அக்டோபர் 25 அன்று, வயது 41 இல், தனது மடத்தில் தம்மை பொறுப்பில் இருக்கும்போதே இறைவனடி சேர்ந்தார். 1898 ஏப்ரல் 29 அன்று புனிதர் பட்டத்திற்கான நடைமுறை அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது. அவரது முத்திப்பேறு பட்டம் குறித்த நடைமுறைகளின் செல்லுபடியாகும் உத்தரவு1927 மார்ச் 23 அன்று வெளியிடப்பட்டது. இந்த தேதிக்குப் பிறகு, இந்த வழக்கில் மேலும் எந்த முன்னேற்றங்களும் பதிவாகவில்லை.







லியோன் நகர மக்கள் இந்த பேராலயத்தை தலைகீழான யானைக் கோயில் என்று பெயரிட்டழைக்கின்றனர். ஏனென்றால், இந்த ஆலயம், தலைகீழாக படுத்திருக்கும் யானைப் போன்றும், ஆலயத்தின் நான்கு கோபுரங்களும் யானையின் கால்களைப் போன்றும் அமைந்துள்ளன. இந்த நான்கு கோபுரங்களும் நான்கு தலையாய புண்ணியங்களை குறிப்பதாக அமைந்துள்ளன. அவையாவன: 1. விவேகம் 2. நீதி 3. துணிவு 4. பொறுமை.



லியோன் நகரம் திருஅவை வரலாற்றில் மிகமுக்கிய பங்கு வகித்த இடமாகும். இரண்டாம் நூற்றாண்டில் தப்பறைக் கொள்கைகளால் திருஅவை தவித்துக் கொண்டிருந்த போது, தனது ஞானம் நிறைந்த செயற்களாலும், எழுத்துக்களாலும் திருஅவையின் உண்மையான படிப்பினைகளை எடுத்தியம்பிய இரனேயுஸ் வழிநடத்திய திருஅவை லியோன் திருஅவை ஆகும். இந்நகரத்து பொக்கிசங்களுள் முக்கியமான இந்த ஆலயம் மக்களின் விசுவாசம் தளர்ந்திருந்த காலக்கட்டத்தில் அதை உறுதிப்படுத்தவும், வளரச் செய்யவும் உறுதுணையாக இருந்தது. நாம் வாழும் இந்நாட்களிலும் நம் விசுவாத்தை திடப்படுத்த இந்தகைய ஆலயங்கள் தேவை என்பதை உணருவோம். ஆலயச் சந்திப்புகளுக்கு நாம் மட்டுமன்றி நம் பிள்ளைகளையும் அழைத்துச் செல்வோம். அன்னையின் விண்ணேற்பு விழாவை சிறப்புடன் கொண்டாட தயார் செய்வோம்.

**திருப்பயணம் தொடரும்..........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## திருப்பாடல்கள் 1-20



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | 4 |
| | 6 | | | | | | | 7 | |
| | | 11 | | | | | | | |
| | | | | | | 12 | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | 13 | | | | | | |
| | | 9 | | | | | 10 | | |
| | 5 | | | | | | | 8 | |
| 1 | | | | | | | | | 2 |

**வலமிருந்து இடம்**

2) என்னுடைய எதிரிகளின் கண் முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு ................. என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர்: எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது.

4) நெஞ்சே! ஆண்டவருக்காகக் காத்திரு: மன உறுதிகொள்: உன்............... வலிமை பெறட்டும்: ஆண்டவருக்காகக் காத்திரு

7) நானோ, கலக்கமுற்ற நிலையில் உமது பார்வையினின்று விலக்கப்பட்டேன் என்று சொல்லிக் கொண்டேன்: ............. நான் உம்மிடம் உதவிக்காக வேண்டினபோது நீர் என் கெஞ்சும் குரலுக்கு செவிசாய்த்தீர்.

8) வானினின்று ஆண்டவர் பார்க்கின்றார்: ............ அனைவரையும் காண்கின்றார்.

10) உமது இல்லத்தின்செழுமையால் அவர்கள் நிறைவு பெறுகின்றனர்: ............... பேரின்ப நீரோடையில் அவர்கள் தாகத்தைத் தணிக்கின்றீர்.

12) ஆண்டவருக்கு அஞ்சுவோரே: அவரைப் புகழுங்கள்: யாக்கோபின் மரபினரே, அனைவரும் அவரை மாட்சிமைப்படுத்துங்கள்: இஸ்ரயேல் மரபினரே, ...........அவரைப் பணியுங்கள்.

**இடமிருந்து வலம்**

1) அவர் உம்மிடம் வாழ்வுவேண்டி நின்றார்: நீரும் முடிவில்லா நீண்ட ஆயுளை அவருக்கு..........

3) ஆண்டவரே, உமது இரக்கத்தையும்ம் உமது பேரன்பையும்.............. ஏனெனில், அவை தொடக்கமுதல் உள்ளவையே.

5) தந்தையும் தாயும் என்னைக் கைவிட்டாலும்................ என்னை ஏற்றுக்கொள்வார்





**மன்றாட்டுக்கள்**

1. அன்பே உருவான இறைவா! உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இறைஞானத்தை நிறைவாக பெற்று நற்செய்தியின் மதிப்பீடுகளை வாழ்வாக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. ஞானத்தின் பிறப்பிடமே எம் இறைவா! நாம் அனைவரும் இவ்வுலகில் வாழுகின்ற பயணிகள் என்பதை உணர்ந்து நிலையற்ற இவ்வுலக இன்பங்களைத் தேடாமல், நிலையான விண்ணக வாழ்வை எமதாக்கிக் கொள்ள தேவையான இறைஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. மகிழ்ச்சியின் ஊற்றே எம் இறைவா! எமது நாட்டுத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் இறைஞானத்தை பெற்று, பெறுவதில் அல்ல மாறாக கொடுப்பதில் உண்மையான மகிழ்ச்சியுள்ளது என்பதை உணர்ந்து வாழ தேவையான இறையருளைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! நாங்கள் உம்மிடமிருந்து பெற்றுக்கொண்ட பொருட்செல்வங்களை ஏழைகளோடும், வறியோரோடும் பகிர்ந்துகொண்டு சமதர்ம சமூகத்தை இவ்வுலகில் நிறுவ தேவையான இறையருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி**

**கடந்த மூன்று வருடங்களாக ஆகட்டும் இதழின் பதிப்பாசிரியராகிய சிறப்பாக பணியாற்றிய அருள்பணி. யுஜின் வின்னர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கிறோம். மேல்படிப்பிற்காக மேலைநாடுகளுக்கு செல்ல இருக்கும் அருள்தந்தைக்கு நம்முடைய ஜெபங்களையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்கிகொள்வோம்.**

## திருப்பலி முன்னுரை

பணம்தான் வாழ்வில் எல்லாம், பணம் இருந்தால்தான் மகிழ்ச்சி என்று சொல்லி பணத்தையும் செல்வத்தையும் சம்பாதிக்க வேண்டும் என்று இரவு பகலாக ஓடி ஓடி உழைப்பவர்கள் மத்தியில் வாழும் நமக்கு, வாழ்வின் மகிழ்ச்சிக்கு அடிப்படை உலக செல்வமோ, மனித ஞானமோ அல்ல, இறை செல்வமும், இறைஞானமுமே என்ற உண்மையை உணர இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

நற்செய்தியில் வரும் பணக்காரரின் செயலை உலகின் பார்வையில் பார்க்கும்போது, அது ஒரு அறிவுடைய சரியான செயலாக இருக்கிறது. ஆனால் கடவுளின் பார்வையில் அது ஞானமற்ற செயலாகத் தெரிகிறது. உலகின் பார்வையும், கடவுளின் பார்வையும் வித்தியாசமானவைகளாக இருப்பதை இன்றைய வாசகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதையே உலக ஞானம் மற்றும் கடவுளின் ஞானம் என்று வேறுபடுத்திப் பேசுகிறார். உலக ஞானத்தைவிட கடவுளின் ஞானம் எவ்வளவோ மேலானது, உயர்வானது என்று சுட்டிக்காட்டுகின்றார்.

வாழ்வின் மகிழ்ச்சி பணத்தில், பதவியில், செல்வத்தில் என்று நாம் நினைத்து அதன்படி செயல்படும்போது நம்மில் செயல்படுவது உலக ஞானமே. ஆனால் இறைஞானத்தின் வடிவாக விளங்கும் இயேசு அது தவறு என்று சுட்டிக்காட்டுகின்றார். நாம் இறைஞானத்தில் படிப்படியாக வளரும்போது, சரியானவற்றை தேர்ந்தெடுத்து சரியான வழியில் செல்லக்கூடிய மக்களாக மாற ஆரம்பிக்கின்றோம். எனவே இறைஞானம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

செல்வமும், இவ்வுலகமுமே நிலையானவை என்று நாம் எண்ணுகின்ற சூழ்நிலையில் 'எல்லாம் வீணே' என்கிறார் சபை உரையாளர். ஒருவர் உழைக்கிறார், உழைத்துச் சேர்த்த சொத்தை அதற்காக உழைக்காதவருக்கு விட்டுச்செல்கிறார் என்கிறார் சபை உரையாளர். உழைப்பவர் ஒருவர், அவர் உழைப்பின் பயனைப் பெறுபவர் வேறொருவர். எனவே உலக செல்வத்தின்மீது பற்றுக்கொண்டு வாழ்வதைவிட இறைஞானத்தை பெற்று வாழ துணைவேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல் பேராசையைச் சிலைவழிபாடு என்றழைக்கின்றார். பேராசைக்கு காரணமாக இருக்கின்ற இவ்வுலக செல்வங்கள் மீது பற்று கொள்ளாமல் மேலுலகு சார்ந்தவைப்பற்றி எண்ண புனித பவுல் அழைப்பு விடுக்கின்றார். உலக இயல்புக்குரிய வாழ்க்கையை விட்டுவிட்டு கிறிஸ்துவை அணிந்துகொண்டு புது மனிதனாக வாழ வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.





6) ஆனால், ஆண்டவரே! உமது............ மலையென உறுதியாக என்னை நிலைநிற்கச் செய்தீர்: உம் முகத்தை மறைத்துக் கொண்டீர்: நான் நிலைகலங்கிப் போனேன்.
9) தீங்கிழைப்போர் அதோ அங்கே குப்புற வீழ்ந்து கிடக்கின்றனர், அவர்கள் நசுக்கப்பட்டனர்: அவர்களால் எழவே............
11) என் கடவுளே! உமது திருவுளம் நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்: உமது திருச்சட்டம் என் ...............இருக்கின்றது' என்றேன் நான்.
13) தீயவர் என் ................ விழுங்க என்னை நெருங்குகையில், என் பகைவரும் எதிரிகளுமான அவர்களே இடறி விழுந்தார்கள்.

**மேலிருந்து கீழ்**

3) வாயில்களே, உங்கள் நிலைகளை உயர்த்துங்கள்: தொன்மைமிகு கதவுகளே, உயர்ந்து ................. மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்.
4) ஏனெனில், உமது பேரன்பு என் கண்முன் இருக்கின்றது: உமக்கு ...................நடந்து வருகிறேன்.
6) ஆண்டவரின் குரல்................. ஒலிக்கின்றது: மாட்சிமிகு இறைவன் முழங்குகின்றார்: ஆண்டவர் நீர்த்திரள்களின்மேல் வீற்றிருக்கின்றார்.
7) நீரே எனக்குப் புகலிடம்: இன்னலினின்று என்னை நீர் பாதுகாக்கின்றீர். உம் மீட்பினால் எழும் ................... என்னைச் சூழ்ந்தொலிக்கச் செய்கின்றீர்.
12) வாய்மையும் நேர்மையும் எனக்கு ................இருக்கட்டும்: ஏனெனில், நான் உம்மையே நம்பியிருக்கின்றேன

**கீழிருந்து மேல்**

1) எங்கள் மூதாதையர் உம்மில் நம்பிக்கை வைத்தனர்: .................. நம்பியதால் நீர் அவர்களை விடுவித்தீர்.
2) பாவிகளுக்குச் .................... போல் என் உயிரைப் பறித்துவிடாதீர்! கொலை வெறியர்களுக்குச் செய்வதுபோல் என் வாழ்வை அழித்து விடாதீர்!
5) ஏனெனில், ஆண்டவரின் செயல்களையோ அவர் கைகள் உருவாக்கியவற்றையோ அவர்கள் மதிக்கவில்லை: ................. அவர் அவர்களைத் தகர்த்தெறிவார் ஒருபோதும் மீண்டும் கட்டி எழுப்புவார்!
8) .................... சபையில் உமக்கு நன்றி செலுத்துவேன்: திரளான மக்களிடையே உம்மைப் புகழ்வேன்.
9) ஆண்டவரே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்: என்னுடைய மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்: என் கண்ணீரைக் கண்டும் மௌனமாய் ..................... ஏனெனில் உமது முன்னிலையில் நான் ஓர் அன்னியன்:
10) கடவுளின் திருச்சட்டம் அவர்களது ............... இருக்கின்றது: அவர்களின் கால்கள் சறுக்குவதில்லை.
13) ஆண்டவரே, நீர் குடிகொள்ளும் இல்லத்தை நான் விரும்பிகின்றேன்: ...................மாட்சி தங்கியுள்ள இடத்தை நான் விரும்புகிறேன்:

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-07-2025

# மரியாவின் பாடல் 25



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

மரியாவின் பாடல் (லூக் 1: 48-55)

1 என் சிறு உள்ளம் பாரீர்
மகிழ்ச்சியின் வெள்ளம் காணீர்
கடவுளை எண்ணி எண்ணி
களிப்பினால் துள்ளி துள்ளி
கதைக்கிறேன் சொல்லி சொல்லி
விதைக்கிறேன் அள்ளி அள்ளி

2. தாழ்ந்தவள் என்னை உயர்த்தி
தூரகை சூட்டி அசத்தி
பேறுடை பெண்மணி என்று
பாரெல்லாம் அழைக்க செய்தார்
தலைமுறை யார்க்கும் அவரின்
தயவினை தழைக்க செய்தார்

3 செறுக்கு கொண்டோரை அடக்கி
பேருக்கும் அகந்தையை முடக்கி
செங்கோல் கரமே உயர்த்தி
செம்மையாய் மாற்றம் செய்தார்
புனிதமாம் அவரின் பெயரை
மனிதரில் தோற்றம் செய்தார்

4. பசித்திடும் மாந்தர்க்கு நலன்களை
புசித்திடும் மார்க்கம் அருள்கிறார்
அன்று புனைந்த வாக்கினை
இன்றும் நினைந்து வருகிறார்
ஊழியர் இஸ்ராயேல் நமக்கு
உறுதுணை இரக்கமும் பொழிகிறார்





## முதல் வாசக முன்னுரை

உண்மையான செபம் என்பது ஆபிரகாமிற்கும் கடவுளுக்குமிடைய நிகழ்ந்த உரையாடலைக் குறிக்கின்றது. ஆபிரகாம் இறைவனோடு பேசுவது, ஒரு நண்பனோடு பேசுவது போன்ற உறவின் வெளிப்பாடாக இருக்கின்றது. ஒரு நண்பனோடு எவ்வளவு உரிமையோடு பேசுவோமோ அந்த அளவிற்கு உரிமையோடு பேசுகின்றார். இச்செபம் விவிலியத்தில் இடம் பெற்றுள்ள முதல் பரிந்துரை மன்றாட்டு. இம்மன்றாட்டு சாத்தியமானது ஆபிரகாம் கடவுளோடு கொண்டிருந்த உறவால்தான். எனவே நாமும் கடவுளோடு உண்மையான உறவு கொண்டு செபித்து இறையருளை பெற இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

பாவ சூழ்நிலையில் பிறந்த நாம் திருமுழுக்கு என்ற அருள்அடையாளத்தின் வழியாக பாவத்திற்கு இறந்த நாம் கிறிஸ்துவோடு புது வாழ்வுக்கு உயிர்த்துவிட்டோம். திருமுழுக்கிற்குப் பிறகு நாம் வாழும் வாழ்வு உயிர்ப்பின் வாழ்வு. இவ்வாழ்வு கடவுளுக்கும் நமக்குமிடையே நடக்கும் ஓர் உறவுப் பரிமாற்றம். இத்தகைய உறவுப் பரிமாற்றத்தில் கடவுளின் அன்பையும், அளவற்ற இரக்கத்தையும் நிறைவாக பெற்று இறை உறவில் வளர்ந்திட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. திருஅவையை வழிநடத்தும் எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் ஆபிரகாமைப் போல உம்மோடு நல்ல நட்புறவை ஏற்படுத்தி தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்காக பரிந்து பேசும் நல்ல கிறிஸ்தவர்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அருளின் ஊற்றே எம் இறைவா! நாங்கள் கடவுளின் பிள்ளைகள் என்ற உரிமையோடு செபிக்கவும், மனந்தளராமல் இடைவிடாமல் செபிக்கவும் அதன் வழியாக உமது அருளை நிறைவாக பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வரங்களை வழங்கும் இறைவா! உமது இயல்பை நாங்கள் அனைவரும் சரியாகப் புரிந்துகொண்டு, சரியான மனநிலையோடும், ஆர்வத்தோடு செபிக்கவும், உணர்ச்சிப்பூர்வமாக அல்ல மாறாக உணர்வுப்பூர்வமாக உம்மை அணுகி வரவும் தேவையான இறையருளைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. இரக்கத்தின் இறைவா! நாங்கள் எங்களது செப வாழ்வில் எங்களது தேவைகளையும் நலன்களையும் முன்னிலைப்படுத்தாமல் பிறருக்காக பிறர் தேவைகளுக்காக மன்றாடும் நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 18 ஆம் ஞாயிறு (03-08-2025)**

**ச.உ 1:2. 2:21-23; கொலோ 3:1-5,9-11; லூக் 12:13-21**

வாழத் தேவையான இறையருளைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நற்கருணையின் நாயகனே எம் இறைவா! எங்கள் மீது கொண்ட அளவற்ற அன்பின் நிமித்தமாக எங்களுக்கு நீர் அருளும் திருவிருந்தை தகுந்த தயாரிப்போடு பங்குபெற்று உமது அருளையும் அன்பையும் நிறைவாக பெற எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நம்பிக்கையின் ஊற்றே எம் இறைவா! நீர் எங்களோடு இருக்கின்றீர் என்ற இறையுண்மையை விசுவசித்து வாழுகின்ற நாங்கள் ஒருபோதும் உம்மை விட்டு விலகாமல், உம்மோடு இணைந்து பயணித்து அதன் வழியாக என்றும் உமக்கு உரியவர்களாக வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 17 ஆம் ஞாயிறு (27-07-2025)

## தொநூ 18:20-32; கொலோ 2:12-14; லூக் 11:1-13

### திருப்பலி முன்னுரை

தற்போதைய காலத்தை செபக்குழுவின் காலம் என்றழைக்கலாம். ஏராளமான மக்கள் திருஅவைக்கு வெளியேயும், உள்ளேயும் குழுக்களாகவும், தனிநபர்களாகவும் செபிக்கின்றனர். செபிப்பது முக்கியமானது என்றாலும், சரியாக செபிப்பது அதைவிட முக்கியமானது. செபிக்கின்ற மக்களில் பெரும்பாலானோர் குறுகிய மனநிலையோடு செபிக்கின்றனர். ஒருசிலர் செபத்தைப் பிரச்சனைகளைத் தீர்க்கும் இடமாக அனுகிச் செல்கின்றனர். மற்றும் சிலர் செபத்தை வலி போக்கும் மருந்தாக அனுகுகின்றனர். இன்னும் சிலர் செபத்தை கையூட்டாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இன்றைய இறைவார்த்தை உண்மையான செபம் என்பது என்ன என்பதையும், எத்தகைய மனநிலையோடு செபிக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன.

செபம் என்பது கடவுளுக்கும் நமக்குமிடையே நடக்கும் ஓர் உறவுப் பரிமாற்றம். இத்தகைய உறவு பரிமாற்றத்தில் கடவுளின் அன்பையும், அளவற்ற இரக்கத்தையும் மனக்கண்முன் கொண்டு அவரை அனுக வேண்டும். இப்படிப்பட்ட இரக்கமிக்க மக்களுக்கு மனமிரங்குகின்ற கடவுளைத்தான் இயேசு தன் வாழ்க்கையின் மூலமும், போதனையின் மூலமும் நமக்கு சுட்டிக் காண்பிக்கிறார். இன்றைய வாசகங்களிலும் அத்தகைய இரக்கமிக்க, மனமிரங்கத் தயாராக இருக்கின்ற கடவுளைப்பற்றியே வாசிக்கின்றோம். எனவே, உணர்ச்சிப்பூர்வமாக செபிப்பதைவிட நாம் அனைவரும் உணர்வுப்பூர்வமாக செபிப்போம். கடவுளின் இயல்பை சரியாகப் புரிந்துகொண்டு, சரியான மனநிலையோடும், ஆர்வத்தோடும் செபிக்கக்கூடிய அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்



அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
ஜெய மாதா பிரயரி. பெங்களூரு.

## பொதுக்காலம் 15 ஆம் ஞாயிறு (13-07-2025)

## இ.ச. 30:10-14; கொலோ 1:15-20; லூக் 10:25-37

### திருப்பலி முன்னுரை

பகவத்கீதை இந்துக்களையும், விவிலியம் கிறிஸ்தவர்களையும், குரான் முகமதியர்களையும் உருவாக்கியுள்ளன. ஆனால் இம்மூன்றும் சேர்ந்து மனிதர்களை உருவாக்கவில்லை. மனிதனாக பிறப்பது ஒரு விபத்து, மனிதனாக வாழ்வது ஒரு சாதனை. இன்று சமயங்களுக்கும், கோவில்களுக்கும், வழிபாடுகளுக்கும் பஞ்சமில்லை. ஆனால் மனிதனுக்கு அதாவது மனித நேயத்துக்குதான் பஞ்சம் வந்துவிட்டது. ஒரு மனிதன் அடுத்த மனிதனைப்பற்றி அக்கறை கொள்ளாதவன் நன்றாகத் தின்று கொழுத்த பன்றி என்கிறார் சாக்ரட்டிஸ்.

அடுத்தவரைப்பற்றி அக்கறை கொண்டு, மனித நேயத்தோடு வாழ வேண்டும் என்பதை இன்றைய நற்செய்தியில் நல்ல சமாரியர் உவமை வழியாக இயேசு வலியுறுத்துகின்றார். நமக்கு அடுத்திருப்பவர் எல்லாம் நமது அயலான் அல்ல. மாறாக, யாருக்கு நம் உதவிக்கரம் தேவைப்படுகிறதோ அவரே நம் அயலான். மேலும் துன்புறும் எவரும் அவரின் மதம், இனம், மொழி வேறுபட்டிருப்பினும் அவர் நமது அயலான். ஒவ்வொரு மனிதனும் நமது சகோதரன் காரணம் அவனும் மனிதன் என்கின்ற உயரிய கருத்தை இன்றைய வழிபாடு நமக்கு உணர்த்துகின்றது. எனவே ஏழை எளியவர்களிடத்திலும், துன்புறுகின்றவர்களிடத்திலும் இறைவனை காணுவோம். உதவியில் இருப்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம். அதற்குத் தேவையான இறையருளை இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### முதல் வாசக முன்னுரை

அயலானை வெறுத்துவிட்டு ஆண்டவரை அன்பு செய்வதாகக் கூறும் எவனும் பொய்யன். கடவுளின் அன்பு அவனிடம் இல்லை என்கிறார் புனித யோவான். கடவுளை முழு இதயத்தோடு அன்பு செய்ய வேண்டும். அயலாரை நம்மைப்போல் அன்பு செய்ய வேண்டும். கடவுளுடைய இக்கட்டளையை அறிய நாம் விண்ணில் பறக்கவோ, கடல் கடந்து செல்லவோ தேவையில்லை. அவை நம் இதயத்தில் கடவுளால் பொறிக்கப்பட்டுள்ளன என்று கூறும் இன்றைய முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல் கூறுகிறார்: இயேசு கட்புலனாகாத கடவுளது சாயல். ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாயல், காரணம் கடவுள் மனிதனை அவரது சாயலாக படைத்தார் என்கிறது தொடக்கநூல். எனவே மனிதர் கடவுளின் சாயல் என்னும் இறையியல் அடிப்படையில் நாம் அயலாரை அன்பு செய்து புனித கடமையை நிறைவேற்ற இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் இறைமக்கள் அனைவரும் உமது அன்புக் கட்டளையை வாழ்வாக்கி மனித நேயம் மிகுந்த சமூகமாக இச்சமூகத்தை உருவாக்கத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. எங்களை வழிநடத்தும் இறைவா! எம் நாட்டின் அரசியல், சமூக, சமய தலைவர்கள் தங்களது பொறுப்பின் மேன்மையை உணர்ந்து நல்ல சமாரியர்களாக வாழ்ந்து மனித நேயம் கொண்ட உலகத்தை படைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஆறுதலின் ஊற்றே எம் இறைவா! தேவையில் இருப்பவர்களின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கு உதவி செய்யவும், துன்பப்படுவோரின் அருகிலிருந்து அவர்களுக்கு ஆறுதலாக வாழவும் தேவையான மனநிலையை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. குணமளிக்கும் இறைவா! மருத்துவமனைகளில் பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்டிருக்கும் அனைத்து நோயாளிகளையும் நீர் தொட்டு குணப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### பொதுக்காலம் 16 ஆம் ஞாயிறு (20-07-2025)

### தொநூ 18:1-10; கொலோ 1:24-28; லூக் 10:38-42

## திருப்பலி முன்னுரை

தமிழ் மரபில் குடும்ப வாழ்வை கடலுக்கு ஒப்பிடுகிறார்கள். கடலில் அலையினால் வரும் இரைச்சல்களும், குடும்பத்தில் பிரச்சனைகளால் வரும் இரைச்சல்களும் ஓயப்போவதில்லை. பிரச்சனைகள் ஓய்ந்த பிறகு குடும்பத்தில் அறச்செயல்கள் செய்யலாம் என்று சொல்வது, அலைகள் ஓய்ந்த பிறகு கடலில் குளிக்கலாம் என்று சொல்வதுபோலாகும். எனவே பிரச்சனைகள் மத்தியிலே அறச்செயல்களை செய்ய நாம் பழகிக்கொள்ள வேண்டும். இவ்வாறு குடும்பங்களில் செய்யப்படும் அறங்களில் முக்கியமான தலையான அறமாகக் கருதப்படுவது விருந்தோம்பல்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செயதற் பொருட்டு – என்கிறார் வள்ளுவர். வீடு வாசலோடு இருந்து கொண்டு, பொருட்களைப் பாதுகாத்து மனைவி மக்களுடன் குடும்பம் நடத்துவதன் நோக்கமெல்லாம் வீட்டுக்கு





வந்தவர்களை உபசரித்து, உலகத்திற்கு உறுதுணையாக இருப்பதுதான். இல்லற வாழ்வின் இனிமை விருந்தோம்பலில் அடங்கியிருக்கிறது என்கிறது தமிழ் இலக்கியம். அத்தகைய சிறப்பு மிகுந்த விருந்தோம்பலைப்பற்றி இன்றைய இறைவார்த்தை பேசுகிறது. நம்மைத் தேடி வருபவர்களை உபசரிப்பது என்பது உண்ண உணவும், இருக்க இடமும் கொடுப்பது மட்டுமல்ல, மாறாக அவர்களோடு மனமுவந்து உரையாடுவதும், உறவாடுவதும்தான் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு சொல்கின்றன. நம்மைத் தேடி வருகின்றவர்களை இவ்வாறு வரவேற்று உபசரிக்கும்போது இறைவனின் ஆசி நம்மைத் தேடி வரும் என்ற நம்பிக்கையோடு இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

தனது இல்லத்திற்கு வராவிட்டாலும் தன் கூடார வாயிலின் வெளியே நின்ற மூன்று மனிதர்களை ஆபிரகாம் அழைத்து, அவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதை பெரும் பேறாகக் கருதி செயல்பட்டதை முதல் வாசகம் மிகவும் தத்ரூபமாக விளக்குகின்றது. அவர்களை வரவேற்று உபசரித்ததன் பயனாக கடவுளின் ஆசியாக பிள்ளைப்பேற்றை பெற்றுக்கொண்டார் என்று விளக்கும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

சவுல் மனந்திரும்பியப் பிறகு இயேசுவின் சீடர்களுடன் சேர்ந்து கொண்டார். கோவிலின் சிறப்பு வாய்ந்த இடம் திருத்தூயகம். இவ்விடமே ஆண்டவர் உறையும் இடமாக யூதர்களால் கருதப்பட்டது. ஆனால் பவுல் அதையும் தாண்டி பெந்தகோஸ்தே நாளன்று கிறிஸ்தவர்களின் இதயங்களே தூய ஆவியால் அவருடைய திருத்தூயகமாக மாறியது என்கிறார். மேலும் ஆன்மீகத் தாகத்தைப்பற்றி கூறுகையில் இம்மானுவேல் என்றால் 'கடவுள் நம்மோடு'. ஆனல் பவுலுடைய இல்லமோ 'நாம் கடவுளோடு' என்று புதிய ஓர் இறையனுபவத்தை நமக்கு தருகின்றார். நாமும் இறைவன் வாழும் இல்லமாக மாற அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

1. திருஅவையை வழிநடத்தும் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் எம்மை தேடி வரும் உம்மை எம் இதயத்தில் வரவேற்று, உமது வார்த்தைக்கு செவிகொடுத்து உமது பார்வையில் சிறந்த பங்கை தேர்ந்துகொண்டவர்களாக வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

2. இரக்கத்தின் இறைவா! எம்மை தேடி வருகின்றவர்களை முகமலர்ச்சியோடு வரவேற்று அவர்களது அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்து உமது அன்பையும் இரக்கத்தையும் அவர்களுக்கு வெளிகாட்டும் மக்களாக நாங்கள்